Registered as a News Paper — பக்கங்கள்: 04 — விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM — Peoples Daily — மக்கள் தினசரி

நாதம்: 02 — திருவள்ளுவர் ஆண்டு 2023 — தை 07 — (21-01-1992) — செவ்வாய்க்கிழமை — ஓசை: 337

## புதிய 100 ரூபா நோட்டுக்கள் புழக்கத்திற்கு வராமல் தடை

(கொழும்பு)

மத்திய வங்கி வைபவரீதியாக வெளியிடவிருந்த புதிய 100 ரூபா நோட்டுக்கள் புழக்கத்திற்கு வராமல் தடைசெய்யப்பட்டுள்ளன. நோட்டுக்கள் அச்சகத்திற்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த நோட்டுக்களைப் புழக்கத்திற்கு விடாமல் தடுத்ததற்கான காரணத்தை வெளியிட மத்திய வங்கி அதிகாரிகள் மறுத்துவருகின்றனர். 100 ரூபா நோட்டுக்களில் அச்சிடப்பட்டிருந்த தமிழ் எழுத்துக்களில் பிழை இருந்ததால், அவை வெளியில் புழக்கத்திற்கு விடப்படவில்லை என்று சொல்லப்படுகிறது.

# யாழ். குடா மீதான இராணுவ படையெடுப்பு அடுத்த மாத நடுப் பகுதியில் தொடங்கலாம்

## போர் ஆயத்தம் நடப்பதாக கொழும்புபத்திரிகை ஆரூடம்

(கொழும்பு)

பெப்ரவரி மாதம் முதல் வாரத்தில் பாரிஸ் நகரில் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு முடிவடைந்த பின்னரே யாழ்ப்பாணக் குடாநாடு மீதான பாரிய இராணுவத் தாக்குதல்களை மேற்கொள்ள சிறிலங்கா தீர்மானித்திருப்பதாக கொழும்புச் செய்திகள் கூறுகின்றன. இந்த படையெடுப்பிற்கான போர் ஆயத்தங்கள் நடைபெறுவதாகவும், வட பகுதி முகாம்களில் பெருமளவு இராணுவத்தினரும், ஆயுதத் தளபாடங்களும் குவிக்கப்பட்டு வருவதாகவும் இச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த சில வாரங்களில் முப்படைகளிலிருந்தும் பெரும் எண்ணிக்கையிலான படையினர் வடபகுதி இராணுவ முகாம்களில் குவிக்கப்பட்டுள்ளனர். வடபகுதி முகாம்களுக்குப் புதிதாக அனுப்பப்பட்ட படையினரின் எண்ணிக்கை பற்றிய விபரங்களை இராணுவத் தலைமை இரகசியமாகவே வைத்திருக்கிறது.

கிழக்கிலும் விமானப் படை பலப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்க் குழுக்களும் சிறிலங்காப் படைகளுடன் இணைந்து இராணுவ நடவடிக்கையில் இறங்குவதற்குத் தயாராக அவ்வப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

1983 இல் அரசுக்கும் புலிகளுக்குமிடையில் யுத்தம் ஆரம்பித்த காலம் முதல் இன்றுவரை அரசு கொள்வனவு செய்த பல ரகங்களையும் சேர்ந்த ஆயுதங்கள் மற்றும் போர்த்தளபாடங்கள் ஆகியன வடபகுதி முகாம்களில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

சுப்பர்சோனிக் ஜெட் சண்டை விமானங்கள், ரி-55 ரக சீன யுத்தத் தாங்கிகள், சீனப் பீரங்கிப் படகுகள், குறுந்தூர 130 எம். எம். பீரங்கிகளுடன் விசேடப் படைப் பிரிவு ஒன்றும் வடபகுதி முகாம்களுக்குஅனுப்பப்பட்டுள்ளது.

புலிகளுக்கு எதிராகப் போராடி அவர்களை ஓரங்கட்டுவது எமது பணி. அதன் பிறகு பேச்சுவார்த்தைகளின் மூலம்அரசியல் தீர்வொன்றைக் காண்பது அரசியல்வாதிகளின் கடமை என்று இந்த இரா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அகதிகள் மனமாற்றம்; அதிகாரிகள் சங்கடம்

(சென்னை)

சென்னையிலிருந்து புறப்பட்ட அக்பர் கப்பல் மூலம் திருக்கோணமலைக்கு திரும்ப எண்ணூறுபேர்வரைபதிவுசெய்யப்பட்டிருந்த போதிலும் அவர்களில் கால்வாசிப் பேர் கடைசி நேரத்தில் தமது பயணத் திட்டத்தை கைவிட்டதாக தெரிய வருகின்றது. சுமார் இருபத்தைந்து சதவிகிதமானோரின் திடீர் மனமாற்றம் இந்திய இலங்கை அதிகாரிகளுக்கு பெரும் சங்கடத்தை ஏற்படுத்தியிருப்பதாக புதுடில்லியிலுள்ள பி. பி. ஸி. முகவர் சுட்டிக்காட்டியுள்ளார். இத் திடீர் மனமாற்றத்திற்கு கப்பல் திருக்கோணமலைக்கு செல்வது என்பதும், மீண்டும் இலங்கை அகதி முகாம்களில் வாழ நிர்ப்பந்திக்கப்படலாம் என்ற அச்சமும் காரணமாக இருக்கலாம் எனவும் தெரிய வருகின்றது.

தமிழ் அகதிகளை திருப்பி அழைத்துக் கொள்வதால் சிறி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அகதிகள் கப்பலுக்கு இந்திய கடற்படை காவல்

சென்னையிலிருந்து இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருக்கோணமலைக்கு ஏற்றி வரும் ''எம். வி. அக்பர்'' என்ற கப்பல் நேற்றுப் புறப்பட்டது. இக்கப்பலில் சுமார் முப்பத்திரண்டு குடும்பங்களைச் சேர்ந்த அறுநூற்றிப் பதின்நான்கு பேர் பயணம் செய்கின்றனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் அரசாங்க உத்தியோகத்தர்களும், அவர்களது குடும்பத்தைச் சார்ந்தவர்களுமெனத் தெரிய வருகின்றது.

அகதிகள் பயணம் செய்யும் இக்கப்பலுக்கு துணையாக 'கங்காதேவி' என்னும் பெயர் கொண்ட இந்தியக் கடற்படையின் ரோந்துப் படகொன்றும் நேற்றுச் சென்னையிலிருந்து புறப்பட்டுள்ளது.

## இந்திய அதிகாரிகளும் அகதிகளுடன் வருகின்றனர்

## 130 நெடுந்தீவு மக்கள் நேற்றுப் புறப்பாடு

(சுண்டிக்குளி)

இராணுவ நடவடிக்கைகாரணமாக யாழ். குடாநாட்டில் பல மாதங்களாக சிக்கியிருந்த தீவகப்பகுதி மக்கள் நேற்று அதிகாலை சர்வதேசசெஞ்சிலுவைச் சங்கத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டனர்.

அதிகாலை 5 மணியளவில் இவர்கள் 130 பேரும் பருத்தித்துறைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு வைத்து இரண்டு கப்பல்களில் ஏற்றப்பட்டு நெடுந்தீவுக்கு கொண்டு செல்லப்பட்டனர். இவர்களுடன் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தை சேர்ந்த மூன்று உயர் அதிகாரிகள் சென்றுள்ளனர்.

## கிண்ணியா முகாமிலிருந்து தமிழர் மர்ம மறைவு

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள கிண்ணியா அகதிமுகாமில் இருந்து அடிக்கடி தமிழர்கள் மர்மமாகக் காணாமல் போய்விடுவதாகத் தெரியவருகிறது. கடந்த இருபது நாட்களில் மட்டும் பத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் இவ்வாறு மர்மமான முறையில் காணாமல் போயிருப்பதாக அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## எறிகணை வீச்சால் தகப்பனும், மகனும் காயம்

(ஈச்சமோட்டை)

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று பிற்பகல் 3 மணியளவில் சிறிலங்கா இராணுவத்தினர் மாவிட்டபுரத்தை நோக்கி எறிகணைத் தாக்குதல் மேற்கொண்டனர் இதில் இரண்டு எறிகணைகள் வீழ்ந்து வெடித்ததில் க.முருகையா (வயது52) அவரது மகன் மு.ஆனந்தசிவம்(வயது 18)ஆகியோர் படுகாயமடைந்தனர். இவர்கள் இருவரும் பின்னர் யாழ்.போதனாவைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டனர். (43)

# அகதிகள் கப்பலுக்கு இந்திய கடற்படை காவல்

சென்னையிலிருந்து இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருக்கோணமலைக்கு ஏற்றி வரும் ''எம். வி. அக்பர்'' என்ற கப்பல் நேற்றுப் புறப்பட்டது. இக்கப்பலில் சுமார் முப்பத்திரண்டு குடும்பங்களைச் சேர்ந்த அறுநூற்றிப் பதின்நான்கு பேர் பயணம் செய்சின்றனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் அரசாங்க உத்தியோகத்தர்களும், அவர்களது குடும்பத்தைச் சாந்தவர்களுமெனத் தெரிய வருகின்றது.

அகதிகள் பயணம் செய்யும் இக்கப்பலுக்கு துணையாக 'கங்காதேவி' என்னும் பெயர் கொண்ட இந்தியக் கடற்படையின் ரோந்துப் படகொன்றும் நேற்றுச் சென்னையிலிருந்து புறப்பட்டுள்ளது.

# இந்திய அதிகாரிகளும் அகதிகளுடன் வருகின்றனர்

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து வரும் தமிழ் அகதிகளின் தேவைகளின் கவனிப்பை அவதானிக்க இந்திய அதிகாரிகள் திருக்கோணமலைக்கு வருகிறார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழகத்திலிருந்து திரும்பும் இலங்கைத் தமிழ் அகதிகளை வரவேற்பதற்கும், தங்கவைத்து அநுசரிப்பதற்கும் இலங்கையில் செய்யப்படும் ஏற்பாடுகளை இவர்கள் நேரில் கண்டறிவர் என்றும்-

இந்தியக் குழுவில் மத்திய, மற்றும் தமிழக அரசாங்கங்களின் உயர் அதிகாரிகள் அடங்குவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சனசக்தி உதவி நிறுத்தம்; கி. சேவகர் வெட்டிக்கொலை

கடந்த மூன்றுமாத காலமாகக் கிடைத்துவந்த சனசக்தித்திட்ட உதவியை நிறுத்தியதாகக் கூறி கிராமசேவையாளர் ஒருவர்சவரக்கத்தியினால் வெட்டிக் கொலைசெய்யப்பட்டுள்ளார். இச்சம்பவம் வெலிப்பிட்டிய என்ற இடத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

சந்தேக நபருக்கு மூன்றாம் மாதம் கிடைக்கவேண்டிய உதவி கிடைக்கவில்லையென்றும், இவர் சனசக்திபெறத் தகுதியற்றவர் என்ற பெயர்ப் பட்டியலில் கிராமசேவையாளர் சேர்த்ததாகவும், இதனால் கோபமடைந்த சந்தேக நபர் கிராமசேவையாளரான கே.தொன்கருணாசேன(வயது 38) மோட்டார் சைக்கிளில் வரும்போது சைக்கிளை நிறுத்தி அவரைச் சவரக்கத்தியினால் வெட்டினார் எனவும் பொலிஸ் விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொழும்பு குண்டுவெடிப்பு; ரவி இந்தியாவில் கைது

கொழும்பில் கூட்டுப்படை தலைமை அலுவலக குண்டு வெடிப்பில் சம்பந்தப்பட்டவர் என சந்தேகிக்கப்படும் ரவி என்பவர் இந்தியாவில் கைது செய்யப்படடுள்ளார் என சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துன்ளன.

இவரை சிறிலங்கா பொலிசார் விசாரணை செய்து வருகின்றனர் என்றும் அவை தெரிவித்துள்ளன.

# மலையகத்தில் 'லயன்கள்;' பொலிஸால் சுற்றிவளைப்பு

கிழக்கு மாகாணத்தில் சிறிலங்காப் பாதுகாப்புப் படையினர் நடாத்தும் அதிகாலைச் சுற்றிவளைப்பு தேடுதல் வேட்டைதற்பொழுது பதுளை மாவட்டத்திலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை ஸ்பிரிங் வெலி தோட்ட லயன்களைச் சுற்றி வளைத்த அதிரடிப் பொலிஸ்படையினர் இரு இளைஞர்களை சந்தேகத்தின் பேரில் கைது செய்து அழைத்துச் சென்றுள்ளனர். இவர்களில் ஒருவர் தனது மாமனாரை பார்க்கவந்தவர் எனத் தகவல்கள்தெரிவிக்கின்றன.

தோட்டப்பகுதி இளைஞர்கள் அடிக்கடி கைது செய்யப் படுவதால் இளைஞர்களை நகர்ப்புறங்களில் இப்பொழுது காணுவது அரிதாக உள்ளதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத்தினரும், ஆயுதத் தளபாடங்களும் குவிக்கப்பட்டு வருவதாகவும் இச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த சில வாரங்களில் முப்படைகளிலிருந்தும் பெரும் எண்ணிக்கையிலான படையினர் வடபகுதி இராணுவ முகாம்களில் குவிக்கப்படடுள்ளனர். வடபகுதி முகாம்களுக்குப் புதிதாக அனுப்பப்பட்ட படையினரின் எண்ணிக்கை பற்றிய விபரங்களை இராணுவத் தலைமை இரகசியமகவே வைத்திருக்கிறது.

கிழக்கிலும் விமானப் படை பலப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்க் குழுக்களும் சிறிலங்காப் படைகளுடன் இணைந்து இராணுவ நடவடிக்கையில் இறங்குவதற்குத் தயாராக அவ்வப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

1983 இல் அரசுக்கும் புலிகளுக்குமிடையில் யுத்தம் ஆரம்பித்த காலம் முதல் இன்று வரை அரசு கொள்வனவு செய்த பல ரகங்களையும் சேர்ந்த ஆயுதங்கள் மற்றும் போர்த்தளபாடங்கள்ஆகியன வடபகுதி முகாம்களில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

சுப்பர்சோனிக் ஜெட் சண்டை விமானங்கள், ரி-55 ரக சீன யுத்தத் தாங்கிகள், சீனப் பீரங்கிப் படகுகள், குறுந்தூர 130 எம். எம். பீரங்கிகளுடன் விசேடப் படைப் பிரிவு ஒன்றும் வடபகுதி முகாம்களுக்குஅனுப்பப்பட்டுள்ளது

புலிகளுக்கு எதிராகப் போராடி அவர்களை ஓரங் கட்டுவது எமது பணி. அதன் பிறகு பேச்சுவார்த்தைகளின் மூலம்அரசியல் தீர் வொன்றைக் காண்பது அரசியல் வாதிகளின் கடமை என்று இந்த இரா

(4 ஆம் பக்கம் பார்க்க)

# தொண்டாவைசீண்டாதீர்கள்! விபரீதம் ஏற்படும்

## அரசுக்கு பத்திரிகையாளர் எச்சரிக்கை

(கொழும்பு)

அமைச்சர் தொண்டமானை சீண்டாதீர்கள். அவர் பலம் மிக்கவர். மேலும் மலையகத் தமிழர்கள், யாழ்ப்பாணத் தமிழர்கள்போன்றோருமல்ல, தொண்டமான் பிரபாகரன் போன்றவருமல்ல. அவர் பக்க பலம் அதிகம் உள்ளவர் என்பதைச் சிறிலங்கா அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும் எனப் பிரபல அரசியல் விமர்சகரான கவுடில்யாஎச்சரிக்கை செய்துள்ளார்.

மேலும் அவர், தொண்டமான் ஒரு தொழிற்சங்கவாதி. பல சர்வதேச நிறுவனங்களுடன் தொடர்புகொண்டுள்ள பலம்பொருந்திய தொழிற் சங்கமொன்றின் தலைவர் தேயிலைதான் இன்னமும் இலங்கையின் பிரதான ஏற்றுமதிப் பொருள் என்பதுடன், இதன் உற்பத்தியில் சம்பந்தப்பட்ட இந்திய வம்சாவளித் தொழிலாளர்கள் இந்திய-இலங்கை அரசுகளுக்கிடையிலான இரண்டு ஒப்பந்தங்களில் சம்பந்தப்பட்டும் உள்ளனர்.

அத்துடன்அமெரிக்க மற்றும் மேற்குநாட்டுத்தலைவர்களின் அண்மைய புதுடில்லி விஜயங்கள் ஐரோப்பாவின் ஜேர்மனியைப்போல தென்னாசியப் பிராந்தியத்தில் இந்தியாவின் முக்கியத்துவத்தைப் புலப்படுத்துவதாகவுள்ளது.

இவற்றின்காரணமாக மலையகத்தில் வாழும் இந்தியத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதானபேச்சுவார்த்தைக்கு சர்வதேச மத்தியஸ்துவம்

## இத்தாலி மாநாட்டில் திலகர்

தமிழரின் தேசிய இனப்பிரச்சினை சம்பந்தமாக நடைபெறும் பேச்சுக்கள் சர்வதேச மத்தியஸ்துவத்தின் கீழ் நடைபெறுவது அவசியமென விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினரானதிரு.லோரன்ஸ் திலகர் அண்மையில் இத்தாலியில் நடைபெற்ற சர்வதேச மாநாடு ஒன்றில் உரைநிகழ்த்துகையில் வலியுறுத்தினார்.

இத்தாலியிலுள்ள பலமோ நகரில் நடைபெற்ற இம்மாநாட்டில் விடுதலைப் புலிகள் இயக்கம் சார்பில் பேசிய திலகர், தமிழீழ மக்களின் தாயகத்தை சிங்கள அரசு அங்கீகரிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். தமிழர் தாயகம், தமிழர் தேசியம், தமிழர் தன்னாட்சி உரிமை ஆகியன தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சினையின் அடிப்படைகள் என வலியுறுத்திய திலகர் இந்த உரிமைகளின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ஒரு தீர்வுத்திட்டம் வகுக்கப்படவேண்டும் எனக் கூறினார்.

# எறிகணைத் தாக்குதல்

(பலாலி)

பலாலியிலுள்ள சிறிலங்கா இராணுவ முகாம் பகுதியிலிருந்து அச்சுவேலி, தம்பாலை, வளலாய்,கதிரிப்பாய்,இடைக்காடு, ஈவினை போன்ற பகுதிகளிலுள்ள பொது மக்கள் குடி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழருக்கிழைத்த அநீதியே இன்றையநிலைக்கு காரணம்

## - பிரேமதாசா

(கொழும்பு)

வடக்குக்கிழக்குப் பிரச்சினைக்குக்காரணம் இனவாதமல்ல அதற்கு இனவாத முலாம் பூசுவது தவறு. அப்பகுதி மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியின்விளைவே இன்றைய பிரச்சினை என்று சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

பொதுக் கூட்டமொன்றில் பேசிய பிரேமதாசா [illegible] பிரச்சினையைப் பேச்சுவார்த்தை, நல்லிணக்கம், உடன்பாடு ஆகியவற்றின்மூலம் தீர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

டத்திலுள்ள கிண்ணியா அகதிமுகாமில் இருந்து அடிக்கடி தமிழர்கள் மர்மமாகக் காணாமல் போய்விடுவதாகத் தெரியவருகிறது. கடந்த [illegible] பத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் இவ்வாறு மர்மமான முறையில் காணாமல் போயிருப்பதாக அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# எறிகணை வீச்சால் தகப்பனும், மகனும் காயம்

(ஈச்சமோட்டை)

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று பிற்பகல் 3 மணியளவில் சிறிலங்கா இராணுவத்தினர் மாவிட்டபுரத்தை நோக்கி எறிகணைத் தாக்குதல் மேற்கொண்டனர் இதில் இரண்டு எறிகணைகள் வீழ்ந்து வெடித்ததில் க.முருகையா (வயது52) அவரது மகன் மு.ஆனந்தசிவம்(வயது 18)ஆகியோர் படுகாயமடைந்தனர். இவர்கள் இருவரும் பின்னர் யாழ்.போதனாவைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டனர். (43)

# மீனவரை மீட்டுத்தர செஞ்சிலுவையிடம் மகஜர்

சிறிலங்கா இராணுவத்தினரால் கடந்தபதினேழாம் திகதி குருநகர் கடற்பரப்பில்வைத்து கைது செய்யப்பட்ட இரண்டு மீனவர்களையும் மீட்டுத் தருமாறு கோரி யாழ். அரசாங்க அதிபரிடமும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடமும் நாவாந்துறை கடற்தொழிலாளர் சங்கம் மகஜர் ஒன்றைக் கையளித்தது.

மேற்படி சங்கத்தினால் நேற்று கையளிக்கப்பட்ட மேற்படி மகஜரில் மண்டைதீவுக்கும் குருநகருக்கும் இடையில் கடந்த 17ஆம் திகதி மீன்பிடித்தொழிலில்ஈடுபட்டிருந்த நாவாந்துறையைச் சேர்ந்த க. சுப்பையா (வயது 40) அ. அன்ரனியோசேப் (வயது 42) ஆகிய இருவரையும் சிறிலங்காஇராணுவத்தினர் கைது செய்துள்ளனர் எனவும் இவர்களை உடனடியாக மீட்டுத் தருமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ச, 43)

# லலித்-காமினி குழுவினரை கண்காணிக்க-என். ஐ. பி.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்த அதிருப்தியாளர்கள் அமைத்த கட்சியை இரகசியப் பொலிஸார் மறைமுகமாகக் கண்காணித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இரகசியப் பொலிஸார் சிலர் தமது கட்சியில் உறுப்பினர் என்ற போர்வையில் ஊடுருவியிருப்பதாக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவரும் முன்னைநாள் பாதுகாப்பு அமைச்சருமான லலித் அத்துலத் முதலி தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் பற்றிப் புலனாய்வு செய்துவரும்தேசிய புலனாய்வு நிறுவன (என். ஐ.

( 4ஆம் பக்கம் பார்க்க)

# பிரேமதாசா - பிரெஸ்லர் கொழும்பில் சந்திப்பு

தற்போது இலங்கை விஜயம் மேற்கொண்டிருக்கும் அமெரிக்க செனட்டரான லாறி பிரெஸ்லர் நேற்று ஜனாதிபதி மாளிகையில் வைத்து சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இப்பேச்சுவார்த்தைகளில் லாறி பிரெஸ்லருடன் அவரது தூதுக் குழுவினரும் கலந்து கொண்டனர்.

## காணவில்லை

16-01-92 அன்று திருநெல்வேலி சென்றல் நேர்சிங் ஹோம் வளவில் நிறுத்தப்பட்டிருந்த ஹீரோ பெண்களுக்கான, கத்தரிப்பூ வண்ண சைக்கிள், காணாமல் போய்விட்டது. யாராவது தெரியாமல் அதை எடுத்திருப்பின் கீழ்வரும் விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

- நிர்வாகி

சென்றல் நேர்சிங் ஹோம்,
திருநெல்வேலி.

(2126)

## யுத்த விமான இரைச்சல்; முட்டை வடிவம் பாதிப்பு

### நஷ்டஈடுகோரி வழக்கு

யுத்த விமானங்களின் பயிற்சியின்போது ஏற்பட்ட இரைச்சலால் தனது கோழிகள் பல்வேறு வடிவங்களில் முட்டையிட்டுள்ளதாக கோழிப்பண்ணையாளர் ஒருவர் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

பிரிட்டிஷ் ஜெட் விமானங்கள் தனது கோழிப்பண்ணைக்கு மேலாக பயிற்சியில் ஈடுபட்டுள்ளதால் அவை இட்டுள்ள முட்டைகள் ஒழுங்கான வடிவமில்லாது இருப்பதாகவும் தனது 5000 கோழிகளில் 1500 கோழிகள் பாதிப்படைந்துள்ளன எனவும், தமக்கு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும் எனவும் கோரியுள்ளார்.

ஒரு முட்டை வாழைப்பழ வடிவானதாக இருந்தது என்றும் ஐந்து கருக்களுடன் முட்டையொன்றை இட்ட கோழி பின்னர் இறந்து விட்டது எனவும் தெரிவிக்கப்படுகிறது

## இதோ!

மக்களுக்கோர் நற்செய்தி!

சகல அச்சு வேலைகளுக்கும் பிரசித்தி பெற்ற நிறுவனம்!

நியூ ஈரா பப்ளிகேசன்ஸ்

- அழகு மிளிரும் வர்ணவேலைகளா
- ஆங்கிலம் தமிழ் புத்தக வேலைகளா

தங்கள் தேவைகளனைத்தையும் பூர்த்தி செய்ய நாடுங்கள்!

## நியூ ஈரா பப்ளிகேசன்ஸ்

*New Era Publications*

267, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

இ/3

## தமிழ்நாட் அணுசக்திதிட்டம்; இந்தியா கைவிட்டது

(டில்லி)

சோவியத் யூனியனின் உதவியுடன் தமிழ் நாட்டில் மேற்கொள்ளப்படவிருந்த அணுசக்தித் திட்டத்தைக் கைவிடப் போவதாக இந்தியா கூறியுள்ளது. முன்னாள் சோவியத் யூனியனின் உதவியுடன் நூற்றுத் தொண்ணூறு கோடி டாலர் கடனுதவியுடன் தமிழ் நாட்டின் கூடங்குளம்பகுதியில் அமைக்கப்படவிருந்த அணு மின் சக்தித் திட்டமே கைவிடப்படவிருப்பதாக இந்திய மத்திய அரசு அறிவித்துள்ளது.

## புங்குடுதீவு மாணவர்களுக்கு கல்விகற்க ஏற்பாடு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு பெருங்காடு அமெரிக்கன் மிசன் வித்தியாலய மாணவர்களுக்கு நேற்று 20 ஆம் திகதி முதல் காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை யாழ். கில்னர் லேனில் உள்ள அமெரிக்கன் மிசன் வித்தியாலயத்தில் கல்வி வகுப்புகள் நடைபெறுகின்றன

இடம் பெயர்ந்துள்ள புங்குடுதீவு கொத்தணிப் பிரிவிற்குட்பட்ட மாணவர்களுக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் மாலையிலேயே வகுப்புக்கள் நடைபெறுகின்ற போதிலும் வேலணை கல்விக் கோட்ட பிரதிப் பணிப்பாளரின் அனுசரணையுடன் மேற்படி பாடசாலை மாணவர்களுக்கு நேற்று முதல் காலை வகுப்புகள் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(22)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பித்த சகலரும் 1992-01-23 ஆம் திகதி மு. ப. 9-00 மணிக்கு பல்கலைக்கழக சபை அறையில் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

தற்காலிக செய்முறை காட்டுநர்.

உடலமைப்பியல் / உடற்றொழிலியல் / சமுதாய மருத்துவம் / மருந்தியல் / சட்டமருத்துவம் / நோயியல் / அறுவைமருத்துவம் / மருத்துவம் / குழந்தை மருத்துவம் / மனநோய் மருத்துவம்.

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்,
1992-01-20.

(சி/3817)

## வெளிநாட்டு தொழில் முகவர்



படத்தில் காணப்படுபவர் வெளிநாட்டு தொழில்வாய்ப்பு தேடித் தரும் ஒருமுகவர் ஆவார். இவரிடம் பணம் கட்டிய எவராவது விண்ணப்பதாரிகள் இருப்பின் உடனடியாக தமிழீழ காவல் துறையின் குற்றப் புலனாய்வு பிரிவுக்கு தகுந்த ஆவண சான்றுகளுடன் அல்லது நிரூபிக்கக்கூடிய வேறு சான்றுகள் இருப்பின் அவற்றுடன் காலை 8-00 மணிக்கும் பிற்பகல் 3-00 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் சமுகம் தந்து, பொறுப்பாளரைச் சந்திக்குமாறு தயவுடன் வேண்டப்படுகின்றனர். ஏற்கனவே சமுகம் தந்து வாக்குமூலம் அளித்தவர்களுக்கு இது பொருந்தாது. ஏனையவர்கள் இன்றிலிருந்து 10 நாட்களுக்குள் சமுகம் அளிக்கவும்.

பொறுப்பாளர்,
குற்றப் புலனாய்வுப் பிரிவு,
யாழ்ப்பாணம்.

(சி/3816)

## வடபிராந்திய முச்சக்கர மோட்டார்வண்டி சேவைச் சங்கம்

வடபிராந்திய முச்சக்கர மோட்டார் வண்டிச் சேவைச் சங்கத்தின் நான்காவது ஆண்டுப் பொதுக் கூட்டம் 14-01-92 அன்று காலை சங்கக் காரியாலய மண்டபத்தில் நடைபெற்றது. மேற்படி கூட்டத்தில் பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர் - திரு. ம. பரிமளசிங்கம்
தலைவர் - திரு. க. கீ நாதன்
உபதலைவர் - திரு. இ. தெய்வேந்திரம்
செயலாளர் - திரு. த. நாகராசா
உபசெயலாளர் - திரு. சு. குலேந்திரன்
பொருளாளர் - திரு. செ. யோகநாதன்
நிர்வாக உறுப்பினர்கள்
- திரு. பொ. செல்வநாயகம்
- திரு. மா. சிவசுப்பிரமணியம்
- திரு. கே. தனபாலன்
- திரு. பொ. பாலசிங்கம்

பிரதான இலிகிதர் திரு. போல் பொனிப்பஸ் அவர்கள் முகாமையாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

இலிகிதர் - திரு. ந. இராமநாதன்

- நிர்வாகம்

இல. 55, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
(2124)

## மொழிபெயர்ப்பாளர் தேவை

தொழில் நுட்பவியல் சார்ந்த விஷயங்கள் தமிழில் மொழி பெயர்க்கும் ஆற்றலுள்ளோர் தேவை.

உடன் தொடர்பு கொள்க:

அம்பலவாணர்,
ஆடிய பாதம் வீதி,
(கொக்குவில் வீதி)
திருநெல்வேலி வடக்கு
திருநெல்வேலி.

(2114)

## DHL உங்கள் கடிதங்களை பாதுகாப்பாக உலகம் முழுவதும் எடுத்துச் செல்கிறது

உங்களின் நண்பன்

DHL தபால் சேவை

**D.H.L. INTERNATIONAL**
C/o Cosmos Marketing Services
120, (200) K.K. S. Road,
Jaffna.

DHL WORLDWIDE EXPRESS

(சி 3815)

## உள்நாட்டு, சர்வதேச

## 6-ம் மாத நினைவஞ்சலி

## நினைவு

கூருகின்றோம்



உபசெயலாளர் - திரு. சு. குலேந்திரன்
பொருளாளர் - திரு. செ. யோகநாதன்
நிர்வாக உறுப்பினர்கள்
- திரு. பொ. செல்வநாயகம்
- திரு. மா. சிவசுப்பிரமணியம்
- திரு. கே. தனபாலன்
- திரு. பொ. பாலசிங்கம்

பிரதான இலிகிதர் திரு. போல் பொனிப்பஸ் அவர்கள் முகாமையாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்.
இலிகிதர் - திரு. ந. இராமநாதன்

- நிர்வாகம்

இல. 55, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
(2124)


தொழில் நுட்பவியல் சார்ந்த விஷயங்கள் தமிழில் மொழி பெயர்க்கும் ஆற்றலுள்ளோர் தேவை.

உடன் தொடர்பு கொள்க:

அம்பலவாணர்,
ஆடிய பாதம் வீதி,
(கொக்குவில் வீதி)
திருநெல்வேலி வடக்கு
திருநெல்வேலி.

(2114)



# D.H.L. INTERNATIONAL
C/o Cosmos Marketing Services
120, (200) K.K.S. Road,
Jaffna.

DHL WORLDWIDE EXPRESS

(சி 3815)



## உள்நாட்டு, சர்வதேச தொலைத் தொடர்புகள்

1. உள்நாட்டுத் தந்தி
(24 மணித்தியாலங்களில் உரியவரிடம் சேரும்)
2. வெளிநாட்டுத் தந்தி
(30 மணித்தியாலங்களில் உரியவரிடம் சேரும்)
3. FAX (ஃபக்ஸ்)
❋ உள்ளூர் செய்திகள்
(24 மணித்தியாலங்களில் சேரும்)
❋ வெளிநாட்டுச் செய்திகள்
(24 மணித்தியாலங்களில் சேரும்)
(செய்திகள் A4 அளவு தாளில் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்)
4. TELEX (ரெலெக்ஸ்)
24 மணித்தியாலங்களில் சேரும்)
5. தொலைபேசி - செய்தி
(120 மணித்தியாலங்களில்) (5 நாட்களின் பின் பதிலுடன் அறிவிக்கப்படும்)
❋ அவசர (URGENT) தொலைபேசிச்செய்தி
(பதிலுடன் 2நாட்கள்) (48 மணித்தியாலங்களில்)
6. ரேடியோ அல்லது பத்திரிகை விளம்பரங்கள்
❋ மரண அறிவித்தல்கள்
(2 நாட்கள்)
❋ பிறந்தநாள் வாழ்த்துக்கள் போன்றவை
(3 நாட்கள்)
✝ சேர்ட்டடங்கள் 15 நாட்களில் கழுவிக் கொடுக்கப்படும்

## BEACON
## தொலைத்தொடர்புகள்,

3·0, ஆஸ்பத்திரி வீதி,
ஸ்ரேசன் சந்தி,
யாழ்ப்பாணம். (சி 3813)


## 6-ம் மாத நினைவஞ்சலி



மண்ணிலே
21 - 1 - 1970

மண்ணுக்காக
14 - 7 - 1991

### லெப்டினன் சந்திரன்
### (சங்கரப்பிள்ளை அன்பரசன்)

சிரித்த வதனம், அமைதியான பண்பு, ஆழ்ந்த சிந்தனை
தரித்த பகையை தறித்து விரட்டிய வீரம்
அன்னையவர் வயிற்றினில் கருக்கொண்ட விடுதலைத் தாகம்
முன்னையவர் சேர்த்திட்ட அடிமை விலங்கு நொருங்கிடும் வேகம்
உணர்வுகளில் காட்டிநின்றான் அன்புக் சரசனவன்
உணர்வதனை மனத்திருத்தி வேங்கையாய் உருவெடுத்தான்
தமிழீழத் தானையதன் தேசியத் தலைவன் பிரபாவின்
அமிழ்தமன்ன விடுதலைப் பணியேற்றான்
எண்பத்தேழுதனில் களம்பல கண்டு காவியம் படைத்தவன்
மண்பற்றினால் இந்தியன் படையில் சிறை கண்டான்
சித்திரவதைகள், துன்பங்கள், துயரங்கள் தானேற்றான்
நித்திரையின்றியே வாடிவதங்கினான் தன்குறி தளரவில்லை
தமிழீழ ஆய்வு நிறுவனம் உயர்ந்திட வித்திட்டான்
தமிழீழ மண்ணை மீட்டெடுக்க பகை ஓட்ட
ஆனையிறவு களத்தில் வரலாறு படைத்திட்டான் பகைவரை
தானையோடு வெற்றிசேர விளைந்த காலை
நெஞ்சினில் குண்டேந்தி மாவீரன் ஆனானே
நெஞ்சினில் மூளுதையா விடுதலைத் தீ எமக்கு
அஞ்சுவமே ? அஞ்சுவமோ? அழித்திடுவோம் வெம்பகையை
அஞ்சாமல் நின் வழியைப் பின் தொடர்வோம்

கயமுககிரி, நவாலி வடக்கு, மானிப்பாய்.

பெற்றோர், சகோதரர்

(212)

## நினைவு கூருகின்றோம்



1992 - 01 - 21

### வீரவேங்கை அன்பழகன்

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் பொலிஸ் காவலில் இருந்து முகத்துவாரத்தில் சுட்டுக்கொல்லப்பட்ட செங்கலடியைச் சேர்ந்த தமிழ் இளைஞன்

1988 ஆம் ஆண்டு தாண்டியடியில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

**2 ஆம் லெப். புவி** [இளையதம்பி ஆனந்தன் - ரொட்டைக்குளம், பொத்துவில், அம்பாறை]

1989 ஆம் ஆண்டு நெடுங்கேணியில் இந்தியப் படையினரின் கைக்குண்டுத் தாக்குதலுக்கிலக்காகி வீரச்சாவெய்திய

**2 ஆம் லெப். வின்சன்** [பரமசாமி ஜெயரூபன் சரசாலை மத்தி, சாவகச்சேரி]

இதே சம்பவத்தில் இந்தியப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 2 தமிழர்கள்

1990 ஆம் ஆண்டு அரியாலை மணியம்தோட்டத்தில் தேச விரோதிகளின் முகாம் மீதான தாக்குதலின்போது வீரச்சாவெய்திய

**ஜீவன்** [பிலிப் செல்வராசா - 11, பழைய பூங்கா வீதி, திலீபன் சிற்றூர், குருநகர்]

**பவான் \ பகவான்** [துரைச்சாமி இராஜேந்திரன் - நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி]

**அழகன் \ அன்பழகன்** [முருகேசு ரவீந்திரன் தம்பகாமம், பளை]

**நரசிம்மன்** (ஜெயபாலசிங்கம் விமல்ராஜ் - கடற்கரை வீதி, உதயபுரம், பாசையூர்]

முல்லைத்தீவில் வீரச்சாவெய்திய

**லெப். அகிலன்** [பொன்னுச்சாமி நற்குணேஸ்வரன் உதயநகர், கிளிநொச்சி]

1991 ஆம் ஆண்டு குறிஞ்சா முனையில் சிறிலங்காப் படையினரின் எறிகணைத் தாக்குதலின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**மயூரன்** [சி. இராமச்சந்திரன் வீராடுமுனை, பளுகாமம், மட்டக்களப்பு]

பாவற்கொடிச் சேனையில் எதிர்பாராத விதமாக குண்டுவெடித்ததில் எம்மைப் பிரிந்த

**சுந்தரம்** [மாசிலாமணி திருச்செல்வம் - சின்னமுனைக்காடு, மட்டக்களப்பு]

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்**

**விடுதலைப் புலிகள் மக்கள்முன்னணி**

(சி /3814)

## சிந்தனைக்கு

உண்மைகளைப் பதிவு செய்வதோடு மட்டும் நின்று விடாதே. அவற்றின் மூல இரகசியத்தைத் துருவி அறிய முயற்சி செய்.

- இவான் பாவ் லவ்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 21-01-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 05

## மனித உரிமை மீறலில் மேற்கின் பங்கு

உலக நாடுகளில் நடைபெறும் மனித உரிமை மீறல்களை பிரிட்டன் ஊக்குவிக்கின்றது என சர்வதேச மன்னிப்புச் சபை குற்றம் சாட்டியுள்ளது. 'அடக்கு முறை வர்த்தகம் பிரித்தானிய லிமிடெட்' என்னும் தலைப்பில் கடந்த புதன் கிழமை விடுத்த அறிக்கையில் தூக்கு மேடை உபகரணங்கள், கால்விலங்குகள், மின்சாரச் சித்திரவதைக் கருவிகள் ஆகியவற்றைப் பிரித்தானிய நிறுவனங்கள் விற்பனை செய்த பல சந்தர்ப்பங்களை அவ்வறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபையின் இக் குற்றச்சாட்டுக்கள் நூற்றிற்கு நூறுவீதம் சரியானதாகும். இதே வேளை, சர்வதேச மன்னிப்புச்சபை குறிப்பிட்டுள்ள சித்திரவதைக் கருவிகள் மட்டுமல்ல, இந்நாடுகளில் உற்பத்தி செய்யப்படும் போர்க் கருவிகள், வெடிப் பொருள்கள், நச்சு ஆயுதங்கள் என்பனவும், அந் நாடுகள் வழங்கும் பொருளாதார உதவிகள்கூட மனித உரிமை மீறல்களுக்குத் துணை போவதாகவே உள்ளன.

பிரிட்டன் உள்ளிட்ட மேற்குலக நாடுகள் உலக ஆயுத வர்த்தகத்தில் முன்னணி வகிக்கும் நாடுகளாகும். இந்த நாடுகளே பெரும் பொருட் செலவில் ஆயுத உற்பத்தியில் ஈடுபட்டு பின்னர் அவற்றை உலக சந்தைக்கு விடுகின்றன. அத்தோடு அங்குள்ள கொம்பனிகளே அரசுகளுக்குத் தெரியாமல் நவீன ஆயுத தளபாட தொழில்நுட்பங்களையும் வெளிநாடுகளுக்கு விற்கின்றன.

ஈராக்கும், பாகிஸ்தானும் அணுக்குண்டு உற்பத்திக்கான தொழில்நுட்பத்தை மேற்கு நாடுகளிடம் இருந்தே பெற்றுக் கொண்டன. இதேவேளை ஒரு நாடு தடைவிதித்தால், வேறொரு நாடு தேவையைப் பூர்த்தி செய்கின்றது. பாகிஸ்தான் அணு ஆயுதத்தை உற்பத்தி செய்து விட்டது என்ற காரணத்தினால் அமெரிக்கா பாகிஸ்தானுக்கான இராணுவ, பொருளாதார உதவிகளை நிறுத்தியது. இதில் முக்கியமானது அணு ஆயுதங்களைத் தாங்கிச் செல்லக் கூடியதான எப். 16 போர்விமானங்களும் அதற்கான உதிரிப்பாகங்களும் ஆகும். ஆனால், உடனடியாகவே பிரான்ஸ் அதே அளவு சக்தியுள்ள மிராஜ் - 2000 ரக போர் விமானங்களை பாகிஸ்தானுக்கு வழங்கச் சம்மதம் தெரிவித்துள்ளது. இந்நிலையில் போருக்கும் அதனால் ஏற்படும் மனித உயிர்களின் அழிவிற்கும், மனித உரிமை மீறல்களுக்கும் ஆயுதங்களை விநியோகிக்கும் இந்நாடுகளே

# தொண்டமானின் சமரச முயற்சியும் சிங்களப் பேரினவாதமும்

தமிழீழ மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியாக தீர்வு காணும் நோக்கில் தீர்வுத் திட்டங்கள் முன்வைக்கப்படும்போது அல்லது உடன்பாடுகள், ஒப்பந்தங்கள் செய்துகொள்ளப்படும்போது சிங்கள பேரினவாதப்பூதம் தலைதூக்குவதும் அதன் கோரத் தாண்டவத்தால் அந்த சமரச முயற்சிகள் இடைநடுவே கைவிடப்படுவதும் இலங்கை அரசியல் வரலாற்றில் காலத்திற்குக் காலம் அரங்கேற்றப்படும் ஒரு தொடர் நாடகம் என்பதை எமது மக்கள் நன்கு அறிவார்கள். தொண்டமானின் சமீபத்திய சமாதான முயற்சியும் இந்தத் துன்பியல் நாடகத்தின் ஒரு சோகமான கட்டமாக முடிவுபெற்றிருக்கிறது.

தொண்டமானின் சமரச முயற்சியும், அவர் முன்வைத்த தீர்வுத் திட்டமும், விடுதலைப் புலிகளுடனேயே நேரடியாகப் பேசவேண்டுமென அவர் கொண்டிருந்த நிலைப்பாடும், இதன் எதிர்விளைவாக தென்னிலங்கையில் எழுந்துள்ள பெரும் சர்ச்சையும், பேரினவாத எழுச்சியும் இன்று உலகத்தின் கவனத்தை ஈர்க்கும் அளவிற்கு விஸ்வரூபம் பெற்றிருக்கிறது. தமிழரின் இனப் பிரச்சினையோடும், விடுதலைப்புலிகளின் போராட்டத்தோடும் பின்னி நிற்கும் இந்த விவகாரத்தை எமது மக்கள் முழுமையாக அறிந்துகொள்வது அவசியம். அத்தோடு சிங்களப் பேரினவாதத்தின் தன்மையையும், அரசியல் தீர்விலுள்ள சிக்கல்களையும் இது தெளிவாகக் காட்டும். இந்த நோக்கத்துடனேயே இந்தக் கட்டுரை எழுதப்படுகிறது.

தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வு காண வேண்டுமென்றால் விடுதலைப்புலிகள் இயக்கத்துடனேயே நேரடியாகப் பேச வேண்டும் என்ற நிலைப்பாட்டை திரு.தொண்டமான் நீண்ட காலமாகவே கொண்டிருந்தார். விடுதலைப் புலிகள் இயக்கம் தான் தமிழீழ மக்களின் உண்மையான போராட்ட சக்திஎன்பதையும், புலிகளை இராணுவ ரீதியில் அடக்கி விடவோ அழித்து விடவோ முடியாது என்பதையும் அவர் தெளிவாக உணர்ந்திருந்தார். இது சம்பந்தமாக அவர் பகிரங்கமான அறிக்கைகளையும் வெளியிட்டு வந்தார். இந்தியாவின் இராணுவத் தலையீடும், தமிழரின்ஆதரவை இழந்த ஆயுதக் குழுக்களை அதிகாரத்தில் அமர்த்த இந்திய அரசு மேற்கொண்டமுயற்சிகளும், அதனால் ஏற்பட்ட தோல்விகளும். விடுதலைப்புலிகளின் இலட்சிய உறுதியும்: போராட்ட திறனும் திரு, தொண்டமானுக்கு சில அரசியல் உண்மைகளை உணர்த்தியிருக்கலாம். இதனால் புலிகள் இயக்கத்தின் முக்கியத்துவத்தை அவர் சரியாக எடைபோட்டிருந்தார். எனவே இந்தியாவினதும், பிரேமதாசா அரசினதும் அடிவருடிகளாகச் செயற்பட்டு வரும் ஏனைய தமிழ்க்குழுக்களை நிராகரித்து விட்டுவிடுதலைப் புலிகளுடன் தொடர்புகொண்டு ஒரு சமரச முயற்சியைமேற்கொள்ள திரு. தொண்டமான் விரும்பினார்.

திரு. தொண்டமான் எதற்காக இந்த சமரச முயற்சியை ஆரம்பித்தார் என்பது ஒரு பெரியகேள்வி? இராணுவத்தீர்வில் நம்பிக்கைகொண்டு இலங்கைத் தீவை பெரும் அழிவுப் பாதையில் இட்டுச் செல்லும் பிரேமதாசா அரசுக்கு கை கொடுத்து உதவ விரும்பினாரா? அல்லது தமிழன் என்ற ரீதியில்தமிழீழமக்களின்நீண்டகாலப் பிரச்சினைக்கு ஒரு தீர்வுகாண வேண்டுமென துணிந்தாரா? அன்றி, அரசியல் வாழ்விலிருந்து ஓய்வு எடுத்துக் கொள்வதற்கு முன்னராக ஏதாவது அர்த்தமுள்ள உருப்படியான காரியத்தைச் சாதித்து விடலாம் என எண்ணினாரா? அல்லது மலையகத்து அரசியல் நிர்ப்பந்தங்கள் அவரைத் தூண்டி விட்டதா? ஏதோ ஒரு காரணத்தால் உந்தப்பட்டு திரு. தொண்டமான் இந்த அக்கினிப் பரீட்சையில் காலை வைத்தார்.

கடந்த ஜூலைமாத முற்பகுதியில் திரு. தொண்டமான் தனது பிரதிநிதி ...

பாட்டை நாம் அவருக்கு தெளிவாக விளக்கினோம். சமாதானக் கதவுகள் திறந்திருக்கின்றன, திரு. தொண்டமான் எப்பொழுதும் யாழ்ப்பாணம் வரலாம், புலிகளுடன் பேச்சுக்களை நடத்தலாம் என நாம் அவரிடம் கூறினோம்.

எமது நிலைப்பாடு திரு. தொண்டமானுக்கு தெரிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து பத்திரிகையாளர் மாநாடு ஒன்றின்போதும் திரு.தொண்டமானை யாழ்ப்பாணம் வரவழைத்து ஒரு பகிரங்க அறிவிப்பையும் விடுத்தோம்.

### தொண்டமானின் முதற் கடிதம்

27.8.1991 திகதியிடப்பட்ட தனது முதலாவது கடிதத்தை அமைச்சர் தொண்டமான் எமது இயக்கத்தலைவர் திரு. பிரபாகரனுக்கு அனுப்பி வைத்தார். அதில் கூறப்பட்டிருப்பதாவது:

அன்புடையீர்,

நீண்டகால யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்து தமிழ்மக்கள் எல்லோரும் விரும்பி நிற்கும் நல்ல தோர் தீர்வினை உருவாக்குவதற்கு நான் பலகாலமாக முயன்றுள்ளேன். இதன் பலாபலன் அனுகூலமாகக்கூடிய சாத்தியக்கூறுகள் இப்போது தென்படுகின்றன ...

மாக எனது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சில சிந்தனைகளை உருவாக்கியுள்ளது. இவற்றை நான் அனுப்பி வைக்கிறேன். உங்களின் கருத்துக்களையும் எனக்கு அனுப்பிவைத்தால்பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க உதவியாக இருக்கும்.

நான் ஒரு தமிழன் என்ற முறையிலும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் என்ற ரீதியிலும் இந்த யோசனைகளை அனுப்பி வைக்கிறேன். இந்தக் கருத்துக்களும் சிந்தனைகளும் அரசாங்க சார்பற்றவையாக கருதப்பட வேண்டும். உங்களது பதிலும் ஆலோசனைகளும் கிடைத்ததும் அவசிய மேற்படின் உங்களுடன் மீண்டும் தொடர்பு கொள்வேன்.

இங்ஙனம்
உங்கள் விசுவாசமுள்ள
சௌ. தொண்டமான்

திரு. தொண்டமான் அனுப்பி வைத்த யோசனைகள் ஒரு முழுமையான தீர்வுத் திட்ட வடிவமைப்பைக் கொண்டிருக்கவில்லை. நிலவுரிமை, பாதுகாப்பு, பொரு ...

டது போல இந்த யோசனைகள் அமைந்திருந்தன. இது எமக்கு ஏமாற்றத்தைக் கொடுத்தது.

### கடிதங்கள் மூலம் பேச முடியாது

திரு தொண்டமானை நாம் யாழ்ப்பாணத்திற்குவர வழைத்து அவருடன் நேரடியாக பல விடயங்கள் பற்றி பேசுவதற்கு தீர்மானித்திருந்தோம். எமது அழைப்பை ஏற்று இங்கு வருவதற்குப் பதிலாக கடித மூலமாகக் கருத்துக்களைப் பரிமாறி, எழுத்துமூலமாக பேச்சுவார்த்

**அன்ரன் பாலசிங்கம்**

தைகளை நடத்த அவர்முனைவது போல எமக்குத் தோன்றியது. அத்துடன் அவர் தமது யோசனைகள் அரசாங்க சார்பற்றது என வலியுறுத்திக் கூறியதும் எமக்கு உற்சாகத்தை அளிக்கவில்லை. எனவே திரு. தொண்டமானுக்கு கீழ்க்கண்ட பதிலை அனுப்பி வைத்தோம்.

அன்புடையீர்

எமது இயக்கத்தலைவர் திரு. வே. பிரபாகரனுக்கு நீங்கள் 27-8-91ல் அனுப்பிவைத்த கடிதத்தைப் பெற்றுக்கொண்டோம். கடிதம் கிடைக்கப்பெற்ற தகவலை சர்வதேச செஞ்சிலுவைச் சங் ...

ஒரு உருப்படியான தீர்வுத்திட்டத்தை நோக்கிய கருத்துப் பரிமாற்றங்களும், விளக்கங்களும் கடித மூலம் வைத்துக்கொள்வது நடைமுறைக்கு சிரமமானது. அத்துடன், சமாதானப் பேச்சுக்களைத் தொடர இது உகந்த வழிமுறையும் அல்ல. நேரடியாகச் சந்தித்து கருத்துக்களை பரிமாறிக்கொள்வதே சிறந்த வழியாகும்.

ஆகவே, நாங்கள் ஏற்கனவே விடுத்த அழைப்பினை ஏற்று, யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்து எமது நிலைப்பாட்டை அறிந்துகொள்ளுமாறு வேண்டுகிறோம். இது, சமாதான முயற்சியை மேலெடுத்துச்செல்வதற்கு வாய்ப்பானதாக அமையும் என நாம் கருதுகிறோம்.

இங்ஙனம்
உங்கள் உண்மையுள்ள
கோ. மகேந்திரராசா

தமிழீழத் தாயகத்தை ஆக்கிரமிக்கும் நோக்கில் சிங்கள அரசு ஒரு முழுமையான யுத்தத்தை நடத்திக் கொண்டு பொருளாதாரத் தடைகளை விதித்து தமிழ் மக்களை பெருந் துன்பத்தில் தள்ளி விட்டிருக்கும் ஒரு நெருக்கடியான நேரத்தில் பேச்சுக்களை ஆரம்பிப்பதென்றால் அதற்கான ஒரு சமரச, நல்லெண்ண சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும். தமிழ் மக்கள் நலனில் அக்கறையும், அரசியல் தீர்வில் உண்மையான ஆர்வமும் இருந்தால் அரசாங்கம் முதற்படியாக ஒரு சமாதான சூழ்நிலையை உண்டு பண்ண உருப்படியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். ஒரு புறம் பெரியதொரு யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்க மறுபுறம் சமாதான பேச்சுக்களை நடத்துவது நடைமுறைச் சாத்தியமாகாது.

இதனை நாம் திரு. தொண்டமானின் பிரதிநிதியிடம், தெளிவாக விளக்கியிருந்தோம் ...

... அரசுகளுக்குத் தெரியாமல் நவீன ஆயுத தளபாட தொழில்நுட்பங்களையும் வெளிநாடுகளுக்கு விற்கின்றன.

ஈராக்கும், பாகிஸ்தானும் அணுக்குண்டு உற்பத்திக்கான தொழில்நுட்பத்தை மேற்கு நாடுகளிடம் இருந்தே பெற்றுக் கொண்டன. இதேவேளை ஒரு நாடு தடைவிதித்தால், வேறொரு நாடு தேவையைப் பூர்த்தி செய்கின்றது. பாகிஸ்தான் அணு ஆயுதத்தை உற்பத்தி செய்து விட்டது என்ற காரணத்தினால் அமெரிக்கா பாகிஸ்தானுக்கான இராணுவ, பொருளாதார உதவிகளை நிறுத்தியது. இதில் முக்கியமானது அணு ஆயுதங்களைத் தாங்கிச் செல்லக் கூடியதான எப். 16 போர்விமானங்களும் அதற்கான உதிரிப்பாகங்களும் ஆகும். ஆனால், உடனடியாகவே பிரான்ஸ் அதே அளவு சக்தியுள்ள மிராஜ் - 2000 ரக போர் விமானங்களை பாகிஸ்கானுக்கு வழங்கச் சம்மதம் தெரிவித்துள்ளது. இந்நிலையில் போருக்கும் அதனால் ஏற்படும் மனித உயிர்களின் அழிவிற்கும், மனித உரிமை மீறல்களுக்கும் ஆயுதங்களை விநியோகிக்கும் இந்நாடுகளே காரணமாகின்றன.

ஆயுத தளபாட விற்பனை மட்டுமல்ல இராணுவ, பொருளாதார உதவிகளையும் இந்நாடுகளே வழங்குகின்றன. அதாவது ஆயுதங்களை கடனாக வழங்குகின்றன. அல்லது பொருளாதார உதவி என்ற போர்வையில் ஆயுதக் கொள்வனவிற்கு நிதி ஒதுக்குவதற்கு ஏற்றவாறு பொருளாதார உதவிகளை வழங்குகின்றன. இதன் காரணமாக உதவி பெறும் நாடுகள் உள்நாட்டில் எவ்வகையான பொருளாதார நெருக்கடி இருப்பினும், ஆயுதக் கொள்வனவிற்கும். அதைக் கொண்டு போரைத் தொடர்ந்து நடத்துவதற்கும், வாய்ப்பு ஏற்படுகின்றது. இதைத் தொடர்ந்து மனித உரிமை மீறல்களுக்கும் வழி ஏற்படுகின்றது.

இந்நிலையில். பிரிட்டன் மட்டுமல்ல உலகில் ஆயுத விற்பனையில் ஈடுபடும் நாடுகளும், பொருளாதார உதவிகளை தமது லாப நோக்கம் ஒன்றை மட்டுமே இலக்காகக் கொண்டு வழங்கும் நாடுகளும் நேரடியாகவும், மறைமுகமாகவும் மனித உரிமை மீறல்களுக்கு உறுதுணை புரிகின்றன. இந்நிலையில், தற்பொழுது மேற்குலக நாடுகள் கூறிக் கொள்வதுபோல் மனித உரிமை மீறல்களுக்கு தனியாகஅடக்குமுறைகளை மேற்கொள்ளும் நாடுகள் மட்டும் காரணமல்ல. அவர்களின் போசகர்களான அவர்களுமே காரணமாகும். ஆகையினால்எதிர்வரும் காலத்திலாவது மனித உரிமைகள் பேணப்பட வேண்டுமானால், அடக்கு முறைகளில் ஈடுபடும் நாடுகளுக்கு இராணுவ தளபாடங்களை விநியோகிப்பதையும் பொருளாதார உதவிகள் செய்வதையும் மேற்குலகம் நிறுத்த வேண்டும். இதுவே மனித உரிமை மீறலை நிறுத்த நடைமுறைச் சாத்தியமான வழி முறையாகும்.

ரீதியில்தமிழீழமக்களின்நீண்டகாலப் பிரச்சினைக்கு ஒரு தீர்வுகாண வேண்டுமெனத் துணிந்தாரா? அன்றி, அரசியல் வாழ்விலிருந்து ஓய்வு எடுத்துக் கொள்வதற்கு முன்னராக ஏதாவது அர்த்தமுள்ள உருப்படியான காரியத்தைச் சாதித்து விடலாம் என எண்ணினாரா? அல்லது மலையகத்து அரசியல் நிர்ப்பந்தங்கள் அவரைத் தூண்டி விட்டதா? ஏதோ ஒரு காரணத்தால் உந்தப்பட்டு திரு. தொண்டமான் இந்த அக்கினிப் பரீட்சையில் காலை வைத்தார்.

கடந்த ஜூலைமாத முற்பகுதியில் திரு. தொண்டமான் தனது பிரதிநிதி ஒருவரை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைத்தார். விடுதலைப் புலிகளின் அரசியல் நிலைப்பாடு என்ன? தமிழீழ தனியரசுக் கோரிக்கைக்கு மாற்றுத்திட்டம் ஒன்று முன்வைக்கப்பட்டால் புலிகள் அதனைப் பரிசீலனை செய்வார்களா? சமாதானப் பேச்சுக்களில் பங்குபற்றுவார்களா? திரு.தொண்டமான் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தால் அவருக்கு பாதுகாப்பு அளிப்பார்களா? இப்படியான வினாக்களுக்கு விடை தேடி இந்தப் பிரதிநிதி யாழ்ப்பாணம் வந்து எம்மைச்சந்தித்தார். சமாதானப் பேச்சுவார்த்தை, அரசியல் தீர்வு சம்பந்தமான விடுதலைப் புலிகளின் நிலைப்

அமைச்சர் தொண்டமான் எமது இயக்கத்தலைவர் திரு. பிரபாகரனுக்கு அனுப்பி வைத்தார். அதில் கூறப்பட்டிருப்பதாவது:

அன்புடையீர்,

நீண்டகால யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்து தமிழ்மக்கள் எல்லோரும் விரும்பி நிற்கும் நல்லதோர் தீர்வினை உருவாக்குவதற்கு நான் பலகாலமாக முயன்றுள்ளேன். இதன் பலாபலன் அனுகூலமாகக்கூடிய சாத்தியக்கூறுகள் இப்போது தென்படுகின்றன.

இத்தகைய சூழ்நிலையில் சமாதான முயற்சியை மேலெடுத்துச்செல்வதற்கு உங்களது இயக்கம் எனக்கு விடுத்துள்ள பகிரங்க அழைப்பை ஏற்றுக்கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன். அர்த்தமுள்ள அதிகாரப் பங்கீட்டின் அடிப்படையில் ஒரு நிரந்தர தீர்வை சிந்திக்க முடியும். தமிழர்களின் அபிலாசைகளைத் தீர்ப்பதற்கு வேண்டிய திட்டவட்டமான கருத்துக்களை நீங்கள் வரையறுத்திருப்பீர்கள். இது விடய

யாக கருதப்பட வேண்டும். உங்களது பதிலும் ஆலோசனைகளும் கிடைத்ததும் அவசியமேற்படின் உங்களுடன் மீண்டும் தொடர்பு கொள்வேன்.

இங்ஙனம்

உங்கள் விசுவாசமுள்ள

சௌ. தொண்டமான்

திரு. தொண்டமான் அனுப்பி வைத்த யோசனைகள் ஒரு முழுமையான தீர்வுத் திட்ட வடிவமைப்பைக் கொண்டிருக்கவில்லை. நிலவுரிமை, பாதுகாப்பு, பொருளாதார திட்டமிடுதல், பொது சேவை போன்ற விடயங்களையும் வேறு சில துறைகள் சார்ந்த அதிகாரப் பரவலாக்கம் பற்றியுமே மிகச் சுருக்கமாக குறிப்பிடப்பட்டிருந்ததே தவிர வேறு விளக்கம் எதுவும் தரப்படவில்லை.

இந்த யோசனைகளில் 'மாகாண அரசு' என்ற சொற்பிரயோகம் கையாளப்பட்டிருந்ததே தவிர தமிழர் தாயகத்தின் பிரதேச அந்தஸ்து, சுயாட்சி உரிமை, ஆட்சி அதிகாரம் எதுவும் பற்றி தெளிவான விளக்கமோ வரையறைகளோ இருக்கவில்லை. ஒரு சில திருத்தங்கள் செய்யப்பட்ட பழைய மாகாண சபைத் திட்டத்தின்அடிப்படைகளைக் கொண்

யோசனைகள் அரசாங்க சார்பற்றது என வலியுறுத்திக் கூறியதும் எமக்கு உற்சாகத்தை அளிக்கவில்லை. எனவே திரு. தொண்டமானுக்கு கீழ்க்கண்ட பதிலை அனுப்பி வைத்தோம்.

அன்புடையீர்

எமது இயக்கத்தலைவர் திரு. வே. பிரபாகரனுக்கு நீங்கள் 27-8-91ல் அனுப்பிவைத்த கடிதத்தைப் பெற்றுக்கொண்டோம். கடிதம் கிடைக்கப்பெற்ற தகவலை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலமாக உங்களுக்கு அறியத்தந்தோம். நீங்கள் இந்தியா சென்றிருந்ததால்உடன்பதில் எழுதுவது தாமதமாகியது.

தமிழீழ மக்களின் தேசியப்பிரச்சினை சம்பந்தமாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் நீங்கள் முன்வைத்த யோசனைகளை நாம் கருத்தில்எடுத்துக்கொண்டோம். அரசியல் தீர்வு குறித்து எமது இயக்கத்தின் கருத்துக்களையும் கேட்டிருந்தீர்கள்.

சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும். தமிழ் மக்கள் நலனில் அக்கறையும், அரசியல் தீர்வில் உண்மையான ஆர்வமும் இருந்தால் அரசாங்கம் முதற்படியாக ஒரு சமாதான சூழ்நிலையை உண்டு பண்ண உருப்படியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். ஒரு புறம் பெரியதொரு யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்க மறுபுறம் சமாதான பேச்சுக்களை நடத்துவது நடைமுறைச் சாத்தியமாகாது.

இதனை நாம் திரு. தொண்டமானின் பிரதிநிதியிடம், தெளிவாகவிளக்கியிருந்தோம் அரசாங்கத்தின் இராணுவ பொருளாதார அழுத்தங்கள் மத்தியில் சுயாதீனமான சமரசப் பேச்சுக்கள் நடத்துவதிலுள்ள சிரமங்களை திரு. தொண்டமான் யாழ்ப்பாணம் வரும்பொழுது எடுத்து விளக்கலாமென முடிவு செய்திருந்தோம். அத்துடன் திரு. தொண்டமான் யாழ்ப்பாணம் வந்து இங்குள்ள நிலைமைகளை நேரில் கண்டறிந்து, எமது மக்களையும் நேரில் சந்தித்து பேச வேண்டும் என்பதிலும் நாம் அக்கறையாக இருந்தோம்.

(தொடரும்)

# புஷ் 42. வீத ஆதரவு டைம் சஞ்சிகை கணிப்பீடு

அமெரிக்க ஜனாதிபதி தெரிவு] தொடர்பாக 'டைம்' சஞ்சிகை நடாத்திய கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பின்படி ஜோர்ஜ்புஸ் 42 சதவீத ஆதரவையும் எதிர்க்கட்சி 36 சதவீத ஆதரவையும் பெற்றுள்ளனர் 22 சதவீத வாக்காளபகள் யாருக்கு ஆதரவென முடிவு செய்யாத நிலையில் உள்ளனர் என செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

# ச.தே·செஞ்சிலுவை அதிகாரி நாடு திரும்பவுள்ளார்

(சுண்டுக்குளி)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ்குழுவில் பணியாற்றிய திரு தோமஸ் அடுத்த மாத நடுப்பகுதியில் தாயகம் (சுவிஸ்) திரும்புகின்றார்.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது கப்பல்களுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்ட இவர் கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக பணியாற்றி வருவது தெரிந்ததே. (75)

## மனித உரிமை பாதுகாப்புக் குழு

# அரசாங்கம் நியமனம்

(கொழும்பு)

இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் கவனத்தை திசை திருப்புவதற்காக சிறிலங்கா அரசு மனித உரிமைகள் பாதுகாப்புக்குழு ஒன்றை நியமித்துள்ளது. ஜே. எம். பி. சொய்சா என்பவரின் தலைமையில் அமைக்கப்பட்டிருக்கும் இக் குழுவானது குற்றச் செயல்களுக்காக கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ர்சிறைக் கூடங்களிலும், தடுப்பு முகாம்களிலும் உள்ள அடிடை வசதிகள் மற்றும், அங்குப் நிலவும் சீர்கேடுகள் ஆகியவற்றை கண்காணிப்பதற்கும் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கும் பொறுப்பாக இருக்கும். மேற்படி பணிகள் இக் குழுவுக்கு வழங்கப்பட்டிருப்பினும் இக்குழுவினர் சுமார்16 இடங்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சுமார்4000வரையான கைதிகளைமட்டுமேமுன்னறிவித்தலுடன் பார்வையிட முடியும் என்று கூறப்படுகிறது. ஆனால் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட தொகையில் கைதிகள் பல இடங்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் இக்குழுவின் உறுப்பினர்கள் எவரும் சுதந்திரமாகச் செயற்படவோ அல்லது தனியாகச் சென்று தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளைச் சந்திக்கவோ அனுமதிக்கப்படுவதில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களில் பெரும்பாலானவர்கள் பழிவாங்கும் நோக்குடன் கைது செய்யப்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் என்றும் கூறப்பட்டது.

## 'காப்பரண்'

# வெளிவந்தது

பனை, தென்னை அபிவிருத்தி ஒன்றியத்தினரின் ''காப்பரண்'' என்ற முத்திங்கள் இதழின் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் மானிப்பாய் மெமோறியல் பாடசாலையில் நடைபெற்றது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் திரு. யோகி இவ்விதழை வெளியிட்டு வைத்து வெளியீட்டுரை நிகழ்த்தினர்.

தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் பொறுப்பாளர் திரு. ரவி உட்பட விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் பல பிரமுகர்களும் இவ்விழாவில் கலந்துகொண்டனர்.

# இஸ்ரேல் அரசாங்கம் எப்பொழுதும் கவிழலாம்

(டெல்அவிவ்)

இஸ்ரேல் பாராளுமன்றத்தில் ஆளும் கட்சியிலிருந்து சில பாராளுமன்ற உறுப்பினர்கள் விலகியதைத் தொடர்ந்து பிரதமர் ஷமீரின் ஆட்சி எந்த நேரமும் கவிழக்கூடும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது. ஷமீர் அரசின் தற்போதைய பலம் பாராளுமன்றத்தில் ஐம்பத்தொன்பதாக வீழ்ச்சியடைந்துள்ளது.

# தொழிற்சங்க போராட்டம்; கொழும்பில் ஆயத்தங்கள்

(கொழும்பு)

கொழும்பில் மிக நீண்டகால இடைவெளிக்கு பின்பு வேலைநிறுத்த குரல்கள் கேட்கத் தொடங்கியுள்ளன. தொழிலாளர் யூனியன் ஒன்றிணைந்து போராட்டத்தை தொடக்க ஆயுத்தம் செய்கின்றன.

1980 இல் தோல்வி கண்ட வேலை நிறுத்தத்தின் பின்னர் இவர்கள் இப்படி ஒரு அணியில் இயங்குவது இதுவே முதல் தடவையாகும். இவர்களின் தலைவர்களில் ஒருவரான ஜனாப் அலரி மௌனான பி. பி. சி.க்கு நேற்று பேட்டி வழங்கும் போதுமேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் குறைந்த சம்பளத் தொகை 3000 - ஆகவும், தொழிலாளர் நலன் உரிமைகள் பேணப்படவேண்டும் என்றும், வாழ்க்கைச் செலவு. பணவீக்கம் என்பன குறைக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

1980ஐ போன்றுஇவ் வேலைநிறுத்தமும் பிசுபிசுக்குமா? என்றகேள்விக்கு தொழிலாளர்களும், அவர்களின் தொழிற்சங்கமும் சுயமாக இதயசுத்தியுடன் தொழிலாளர் நலனுக்கு சேவை செய்ய வேண்டும். அப்படியாக அனைவரும் ஒரே குரலில் கேட்டால் அரசு நிச்சயம் இதற்கு செவிசாய்க்க வேண்டி வரும் என்றார்.

# கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம் மந்திப பதி நிலைய ஸ்ரீ ஞான வைரவ சுவாமி ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர் வரும் (24.1.92) வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு சிறப்பாக நடைபெற உள்ளது.

ஹோமம், யாகம், யந்திர பூஜைகளுடன் மங்கள இசை, சுவாமி வீதிவலம் வருதல், விசேட அபிஷேகம் என்பனவும் (20.1 92) திங்கள் தொடக்கம் 24 ஆம் திகதி வரை நடைபெற ஏற்பாடாகி இருக்கின்றது. (21)

ஈழநாதம்

அணுஆயுதப் பரவலைத் தடுக்க

# பிராந்திய ரீதியில் இந்தியா பேச்சு நடத்த வேண்டும்

## பிரிட்டன் வற்புறுத்து

(டில்லி)

அணுஆயுத பரவலைத் தடுக்க பிராந்திய ரீதியில் பேச்சு நடாத்த வேண்டும் என்ற அமெரிக்காவின் போசனையை ஏற்பது குறித்து இந்தியா ஆலோசிக்க வேண்டும் என பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சர் டக்லஸ் ஹேர்ட் புதுடில்லியை நிர்ப்பந்தித்ததாக சிரேஷ்ட பிரிட்டிஷ் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இந்தியா, பாகிஸ்தான், சீனா, ரஷ்யா, அமெரிக்கா ஆகிய நாடுகள் முதல் நடவடிக்கையாக இது குறித்து பேசவேண்டும் என பிரிட்டன் கருதுகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

அணுஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் இந்தியாவும், பாகிஸ்தானும் கையொப்பமிட மறுத்து வருகின்றன ஆனால் இரு நாடுகளும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவது உண்மையில் நெருக்கடியைக் குறைக்குமெனவும் பிரிட்டிஷ் அதிகாரி தெரிவித்தார்.

இந்தியாவும், பாகிஸ்தானும் அணுசக்தி நாடுகளாக விளங்கி வருகின்றன. இநநாடுகளும் அணு ஆயுதம் உற்பத்திசெய்து வருவதாக கூறப்படுவதையும் மறுத்து வருவதுடன் அணு பரவல் தடை ஒப்பந்தத்திலும் கைச்சாத்திடவும் அவை மறுத்து வருகின்றன.

ஐந்து நாடுகளின் பேச்சில் சேர இந்தியா சம்மதிக்குமா என்பது தெளிவாகவில்லை.

அமெரிக்க யோசனை ஏற்கப்படுவது சந்தேகமே என வெளிநாட்டு அமைச்சு அதிகாரி ஒருவர் ஏற்கனவே கூறியுள்ளார்.

அதேவேளை 'இந்த யோசனையை நிராகரிக்க முடியாது ஆனால் தற்சமயம் இதற்கான சாத்தியமும் குறைவு' என இந்திய அதிகாரியை மேற்கோள் காட்டி பி.பி.ஸி. தனது செய்தியில் தெரிவித்துள்ளது.

# வெங்கட்ராமன் -அரபாத் புதுடில்லியில் சந்திப்பு

(டில்லி)

பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசீர் அரபாத் நேற்று இந்திய குடியரசுத் தலைவர் மாளிகையில் வைத்து இந்தியக் குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமனைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். குடியரசுத் தலைவர் மாளிகையில் நடந்த வரவேற்பில் இந்தியப் பிரதமர் பி.வி. நரசிம்மராவ் உட்பட பலர் வரவேற்றனர்.

ஒற்றுமைக்கும், சமாதானத்திற்குமான திருமதி இந்திரா காந்தி ஞாபகார்த்த சர்வதேச விருது இம்முறை ஜனாப் யாசீர் அரபாத்திற்கு வழங்கப்படவுள்ளது. இவ்விருது வழங்கும் வைபவம் இன்று புதுடில்லியில் நடைபெறும்.

க. பொ. த. சாதாரணதரம்
(ஆண்டு 11)
✿ பகல் முழுநேர வகுப்புகள்
✿ சனி, ஞாயிறு வகுப்புகள்

## தொழிற் பயிற்சி

(கொழும்புத்துறை)

வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கம் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்குத் தொழிற்பயிற்சி அளித்து வருகின்றது. தற்போது சுருக்கெழுத்து, தட்டச்சுப் பயிற்சியை நடாத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

ஏற்கனவே சுருட்டுத் தொழிலாளர் குடும்பத்தைச் சேர்ந்த யுவதிகளுக்குத் தையற் தொழிற்பயிற்சியும் இச்சங்கத்தால் அளிக்கப்பட்டு வருகின்றது எனச் சங்கச் செயலாளர் தெரிவித்துள்ளார். (24)

## நெரிசலில் மூவர் மரணம்

பெங்களூரில் இலவச உணவு விநியோக நடவடிக்கையின் போது ஏற்பட்ட நெரிசலில் மூன்றுபேர் உயிரிழந்துள்ளனர்.

சமையல் உபகரணங்களும் இந்த இடத்தில் வைத்து விநியோகிக்கப்பட்டதனால் நெரிசல் ஏற்பட்டது என்றும் இதனாலேயே உயிர் இழப்புக்கள் ஏற்பட்டன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# சீன யுத்த தளபாடங்கள் தரத்தில் குறைந்தவை

## -தாய்லாந்து சஞ்சிகை தகவல்

சீனாவிடமிருந்து தாய்லாந்து அரசு கொள்வனவுசெய்த பெரும் தொகையான கனரக யுத்த தளபாடங்கள் தரத்தில் குறைந்தவை என்றும் பயன் பொருத்தமற்றவை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தாய்லாந்து பாதுகாப்பு அமைச்சின் இராணுவ சஞ்சிகை இத்தகவலை வெளியிட்டுள்ளது.

தாய்லாந்து அரசுக்கு கடற்படைக்கென சீனா கட்டிய ஆறு யுத்தக்கப்பல்களும் தரக்குறைவானவை என்று அந்தச் சஞ்சிகை தெரிவிக்கின்றது. மேலும் சீனாவிடமிருந்து கொள்வனவு செய்த 100 ரி-59 தாங்கிகளில் பல செயலிழந்திருப்பதாக அந்தச் சஞ்சிகை தெரிவித்திருக்கிறது. தாங்கிகளில் பொருத்தப்பட்டுள்ள துப்பாக்கிகளும் தரக்குறைவானவை என்றும் இராணுவ தரப்பில் சொல்லப்படுகிறது.

ஐந்து ஆண்டுகளுக்கு முன் தாய்லாந்து சீனாவிடமிருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய ஆரம்பித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# செயலிழந்து கிடக்கும் 3 சீனபீரங்கிப் படகுகள்

சீனாவிடமிருந்து சிறிலங்கா கொள்வனவு செய்த மூன்று பீரங்கிப் படகுகள் பழுதடைந்து கைவிடப்பட்ட நிலையில் திருக்கோணமலையில்உள்ளன பழுதடைந்ததற்கான காரணத்தைத் தெரிந்து கொள்ள சீனாவிலிருந்து நான்கு பேர் அடங்கிய இராணுவ தொழில்நுட்பவியலாளர் குழு ஒன்று சிறிலங்கா வந்துள்ளதாகக் கடற்படை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்தவாரம் கொழும்பு வந்த இந்தக் குழு படகுகளைப் பார்வையிடுவதற்காக திருக்கோணமலை சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் படகுகள் 1991 செப்ரெம்பரில் சீனாவிடமிருந்து 150 மில்லியன் ரூபாவிற்கு கொள்வனவு செய்யப்பட்டன.

# பிரான்ஸ் மிராஜ்-2000 தரம் குறைந்தவையாம்

# உப்பள ஊழியருக்கு ஒருபகுதிச் சம்பளம்

(யாழ்ப்பாணம்)

வட பிராந்திய உப்பளங்களைச் சேர்ந்த நிரந்தர ஊழியர்கட்கு 1991 ஆம் ஆண்டுக்கான சம்பளத்தில் ஒரு தொகுதி வழங்கப்படவுள்ளது.

வரும் 23 ஆம் திகதி பளை உபகாரியாலயத்திலும், 24 ஆம் திகதி முரசுமோட்டை உபகாரியாலயத்திலும் இக் கொடுப்பனவு நடைபெறவுள்ளது. ஊழியர்கள் வரும்போது வங்கிக் கணக்குப் புத்தகத்தைக் கொண்டுவரும்படி பணிக்கப் பட்டுள்ளார்கள். நிதி முகாமையாளரின் பணிப்பின் படி வங்கிக் கணக்கில்லாத ஊழியர் எவருக்கும் இக் கொடுப்பனவு வழங்கப்பட மாட்டாது என்பதனை பிராந்திய முகாமையாளர் அறியப் படுத்துகின்றார்.

# மனித உரிமை மீறல்; கொழும்பில் கண்டனக் கூட்டம்

[கொழும்பு]

சிறிலங்கா அரசின் மனித உரிமைகள் மீறல் நடவடிக்கைகளைக் கண்டித்து பொரளை டி மெல் பூங்காவில் நாளை பொதுக் கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

சுதந்திரக் கட்சித் தேசிய அமைப்பாளர் அனுர பண்டாரநாயக்கா கூட்டத்துக்கு தலைமை வகிப்பார். வாசு தேவநாணயக்காரா, லலீத் அத்துலத்முதலி, காமினி திஸநாயக்கா, டி. எம். பிரேமச்சந்திரா, அத்தாவுட செனிவிரத்னா ஆகியோர் இக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள்.

## கிரான் குளத்தில் 6 பொலிஸ்காயம்

மட்டக்களப்பில் கண்ணிவெடி ஒன்று வெடித்ததில் ஒரு நீதிபதியும் ஆறு பொலிஸாரும் படுகாயமடைந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கிரான்குளம் என்ற பகுதியில் நேற்று வீதியில் இரு வாகனங்களுக்கிடையில் கண்ணிவெடி வெடித்ததில் இந்த ஏழுபேரும் படுகாயம் அடைந்ததாகத்தெரிவிக்கப்படுகிறது.

## லலித்

பி.) முதுநிலை அதிகாரி தலைமையிலானகுழுஒன்று தம்மைக் கண்காணித்து வருகிறதென்றும் லலித் தெரிவித்தார்.

அரசின் பாதுகாப்புத்தேவைகளுக்கென பிரான்ஸ் நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட கருவியைக் கொண்டு தொலைத் தொடர்புப் பேச்சுக்கள் ஒட்டுக் கேட்கப் படுவதாகவும், இந்தக் கருவி அரசியல் எதிரிகளுக்கு எதிராகப் பாவிக்கப்படுவதாகவும் லலித் குற்றம் சாட்டினார்.

## தொண்டாவை

தமிழர்களுக்கெதிரான செயற்பாடுகள் ஒரு ஐ. நா. அமைதிப்படையின்பிரசன்னத்திற்கு வழிவகுக்கும் ஆபத்தைக் கொண்டுள்ளது என்பதைஅரசு புரிந்துகொள்ளவேண்டும் என

## கூட்டம்

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தலைவர்களுக்கான கூட்டம் ஒன்று நாளை(புதன் கிழமை) பகல் பன்னிரெண்டு மணிக்கு யாழ்.கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கூட்டத்திற்கு அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு யாழ்.மாவட்ட கூட்டுறவுப் பிரிவினர் கேட்டுள்ளனர். (ச)

# டிப்ளோமா விரிவுரையாளர் பயிற்சி வகுப்புக்கள்

பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா பயிற்சிக்குரிய விரிவுரையாளருக்கான ஐந்துநாள் குறுகியகால பயிற்சி வகுப்புக்கள்மகாரகமவில் உள்ளதேசிய கல்வி நிறுவனத்தில் மிக விரைவில் நடைபெறவுள்ளன.

இவ்விரிவுரைகளில் கலந்து கொள்வதற்காக மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மாவட்டங்களிலிருந்து 18 ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டு இவர்களது பெயர் விபரங்கள் யாழ். கல்வித் திணைக்கள முகாமைத்துவ நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பயிற்சியின் பின் இந்த விரிவுரையாளர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள இரு நிலையங்களில் பட்டப்படிப்பு டிப்புளோமா பயிலுநர் சுமார் 481 பேருக்கு விரிவுரை வகுப்புகளை நடத்துவார்கள்.

## பாதுகாப்புச் சபை உச்சி மாநாடு

(டில்லி)

ஐ. ந. வின் பாதுகாப்பு சபையில் இடம்பெறும் பதினைந்து நாடுகளின் உச்சி மாநாடு ஜனவரி 31 ஆம் திகதி நியூயோர்க்கில்இடம்பெறவுள்ளது. இத்தகைய தொரு மாநாடு நடைபெறுவது இதுவே முதல்தடவையாகும். ஐ. நா. பாதுகாப்புச்சபையில் தற்போது இந்தியாவும் அங்கம் வகிக்கிறது.

புதிய பிரிவு
கணக்கியல்
திரு. S.K. பிரபாகரன்
A/L 93 செவ்வாய் - வியாழன் 3 - 4
A/L 92 செவ்வாய் - வியாழன் 4 - 5
யூனிவேர்சல்
கந்தர்மடம் — யாழ்ப்பாணம்
(சி 3820)

## மரண அறிவித்தல்கள்

தலைவர் ஆர். வெங்கட்ராமனைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். குடியரசுத் தலைவர் மாளிகையில் நடந்த வரவேற்பில் இந்தியப் பிரத

யாசீர் அரபாத்திற்கு வழங்கப்படவுள்ளது. இவ்விருது வழங்கும் வைபவம் இன்று புதுடில்லியில் நடைபெறும்.


க. பொ. த. சாதாரணதரம்

(ஆண்டு 11)

- பகல் முழுநேர வகுப்புகள்
- சனி, ஞாயிறு வகுப்புகள்
- மீட்டல் வகுப்புகள்

ஆரம்பம்

25-1-92 சனி காலை 7-45 மணி

யூனிவேர்சல்

கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

இதைவிடத் தெரிவு .........

வேறேதும் இல்லை! (சி/3821)



பேராதனைப் பல்கலைக் கழக

வெளிவாரி விரிவுரைகள்

G. A. Q.

மீட்டல் விரிவுரை

பாடம்:- அரசியல் விஞ்ஞானம்

எமது கல்லூரியின் முன்னாள் விரிவுரையாளர் அவர்களால் ஒருமாதகாலம் தொடர்ந்து நடாத்தப்படும்.

ஆரம்பம்

22-01-1992 புதன்கிழமை பி. ப. 3-00 மணி

விபரங்களுக்கு

உதவிப்பதிவாளர்

பட்டப்படிப்புகள் கல்லூரி

148/1 ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

(சி/3818)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


## 3 சீனபீரங்கிப் படகுகள்

சீனாவிடமிருந்து சிறிலங்கா கொள்வனவு செய்த மூன்று பீரங்கிப் படகுகள் பழுதடைந்து கைவிடப்பட்ட நிலையில் திருக்கோணமலையில்உள்ளன. பழுதடைந்ததற்கான காரணத்தைத் தெரிந்து கொள்ள சீனாவிலிருந்து நான்கு பேர் அடங்கிய இராணுவ தொழில்நுட்பவியலாளர் குழு ஒன்று சிறிலங்கா வந்துள்ளதாகக் கடற்படை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்தவாரம் கொழும்பு வந்த இந்தக் குழு படகுகளைப் பார்வையிடுவதற்காக திருக்கோணமலை சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் படகுகள் 1991 செப்ரெம்பரில் சீனாவிடமிருந்து 150 மில்லியன் ரூபாவிற்கு கொள்வனவு செய்யப்பட்டன.

## பிரான்ஸ் மிராஜ்-2000 தரம் குறைந்தவையாம்

### பாக். அதிகாரிகள் அதிருப்தி

(இஸ்லாமாபாத்)

பிரான்சிடம் போர் விமானங்களை பாகிஸ்தான் கொள்வனவு செய்தது தொடர்பாக பாகிஸ்தானிய கடற்படை அதிகாரிகளும், பாதுகாப்புத் துறை அதிகாரிகளும் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

நாற்பது மிராஜ்-2000 ரக போர் விமானங்களை பிரான்சிடம் இருந்து பாகிஸ்தான் வாங்கியது தெரிந்ததே.

இந்த விமானங்கள் தரம் குறைந்தவை யென்றும், மிக மோசமானவை யென்றும், அத்துடன் அதிக விலையையும் கொண்டுள்ளன என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## புதிய நாடுகளுக்கு இராணுவம் தேவை

### உக்ரெயின் அதிபர் அறிவிப்பு

(மொஸ்கோ)

சோவியத் சுதந்திர நாடுகளின் பொதுநல அமைப்பில் இடம்பெறும் உறுப்பு நாடுகள் தங்களுக்கென சொந்தத்தில் இராணுவத்தை அமைத்துக் கொள்வதற்காகச் செய்யும் முயற்சிகளை நிறுத்திவைக்க முடியாதென உக்ரெயின் அதிபர் தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சிமூலம்உரையாற்றிய உக்ரெயின் அதிபர் இந்தப் பொதுநல அமைப்பு ஒருமித்தோர்நிலையை இன்னமும் எட்டவில்லையாதலால் அது ஒருங்கிணைப்பான ஆயுதப் படைகளின் பிரிவொன்றினைக் கொண்டிருக்க முடியாது என்றும் தெரிவித்தார்.

சோவியத் இராணுவத்திற்குப் பதிலாக அதன் இடத்தில் ஒரே தனிப்பட்ட படை ஒன்று அமைக்கப்படவேண்டும் என கடந்த வெள்ளிக்கிழமையன்று சந்தித்துக் கூட்டம் நடத்திய ஐயாயிரம் முன்னாள் சோவியத் இராணுவ வீரர்கள் கோரியதை அடுத்தே உக்ரெயின் அதிபரின் இந்த அறிக்கை வெளியானது.

## பங்களாதேஷ் தீவுகளை இந்தியா ஆக்கிரமிப்பு

(டாக்கா)

பங்களா தேசத்திற்கு சொந்தமான இரு சிறிய தீவுகளை இந்தியா ஆக்கிரமித்து கொண்டிருப்பதாக பங்களாதேசப் பத்திரிகை யொன்று குற்றம் சாட்டியுள்ளது. பங்களாதேசின் வடபகுதியில்இருக்கும் இரு சிறிய தீவுகளில் வாழ்ந்த குடும்பத்தவர்களை இந்தியாவின் எல்லைக் காவல் படையினர் துப்பாக்கி முனையில் வெளியேற்றியதாகவும் அப்பத்திரிகை மேலும் கூறியுள்ளது.

ஜனவரி 3ஆம் திகதி முதல் ஆக்கிரமித்துக் கொண்ட இத்தீவுகளில் இந்தியா பெருமளவு ஆயுதங்களைக் குவித்து வருவதாகவும், கடந்த வருடம் இந்தியா மேற்கொண்ட இதே போன்ற முயற்சியை பங்களாதேசின் பரா இராணுவத்தினர் முறியடித்ததாகவும் அப் பத்திரிகை மேலும் கூறியுள்ளது.

### எறிகணை

யிருப்புகளை நோக்கி எறிகணைத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டிருப்பதாக தெரியவருகின்றது இப்பகுதிகளிலுள்ள பல இடங்களிலும் எறிகணைகள் விழுந்து வெடித்துள்ளன. நேற்றுமுன்தினம் நடைபெற்ற இத்தாக்குதலின் சேதம் பற்றிய விபரம் தெரியவரவில்லை.

கண்காணித்து வருகிறதென்றும் லலித் தெரிவித்தார்.

அரசின் பாதுகாப்புத்தேவைகளுக்கென பிரான்ஸ் நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட கருவியைக் கொண்டு தொலைத் தொடர்புப் பேச்சுக்கள் ஒட்டுக் கேட்கப் படுவதாகவும், இந்தக் கருவி அரசியல் எதிரிகளுக்கு எதிராகப் பாவிக்கப்படுவதாகவும் லலித் குற்றம் சாட்டினார்.

### தொண்டாவை

தமிழர்களுக்கெதிரான செயற்பாடுகள் ஒரு ஐ. நா. அமைதிப் படையின்பிரசன்னத்திற்கு வழிவகுக்கும் ஆபத்தைக் கொண்டுள்ளது என்பதைஅரசு புரிந்துகொள்ளவேண்டும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ராஜீவ்காந்தி கொலைச்சம்பவத்தோடு தொடர்புபடுத்தி தமிழீழ விடுதலைப் புலிகளையும், தலைவர் பிரபாகரனையும் தண்டிப்பதில் இந்தியா கொண்டுள்ள விருப்பம் தற்போதைய கொழும்பு - புதுடில்லி உறவில் ஒரு சுமுகமான நிலையைத் தோற்றுவித்துள்ளது. எனினும் அண்மையில் இலங்கை வெளியுறவு அமைச்சர் ஹேரத்திடம் பேசிய இந்திய வெளியுறவுச் செயலாளர் டிக்ஸிற் கச்சதீவு ஒப்பந்தம் போலவே ஜே. ஆர் - ராஜீவ் ஒப்பந்தமும் கௌரவிக்கப்படவேண்டும்எனக்கூறியிருப்பதில் இருந்து இந்தியாவின் எண்ணத்தைப் புரிந்துகொள்ள வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

### யாழ்.

ணுவ முஸ்தீபுகளுக்கிடையில் ஒரு முதுநிலை இராணுவ அதிகாரி அபிப்பிராயம் தெரிவித்துள்ளார்.

இப்போது சிறிலங்கா பாதுகாப்புப் படையின் பலம் 1,00,000 என்று தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் 1983 இல் போர் ஆரம்பித்தகாலப் பகுதியில் அரச படைகளிடம் இல்லாத பல புதிய வகைப் போர்க்கருவிகள் படையினரின் கைவசம் உள்ளன.

கனரக வாகனங்கள்,ஒன்பது பீரங்கிப்படகுகள் மற்றும் 15 அதிகவேகடோராப் படகுகள், ஜெட் விமானங்கள், பாரிய பீரங்கிகள் ஆகியனவும் படைகளிடம் இருப்பதாகவும் கொழும்புச் செய்திகள்மேலும் தெரிவிக்கின்றன.

### அகதிகள்

லங்கா அரசு வெளிநாட்டு உதவிகளைப் பெறுவதற்கு வாய்ப்பு உண்டாகும் எனவும் பி. பி. ஸி. தெரிவித்தது.

### தமிழருக்

த்துவைக்கவே நான் முயல்கின்றேன். இதற்கு இது தான் சிறந்த முறையென்றும் அவர் குறிப்பிட்டார்.


A/L 93 செவ்வாய் - வியாழன் 3 - 4

A/L 92 செவ்வாய் - வியாழன் 4 - 5

யூனிவேர்சல்

கந்தர்மடம் — யாழ்ப்பாணம்

(சி/3820)


## மரண அறிவித்தல்கள்

### நடேசபிள்ளை தெய்வானைப்பிள்ளை

19-01-92 அன்று காலை10-00 மணிக்கு நடேசபிள்ளை தெய்வானைப்பிள்ளை (துணுக்காய்) காலமானார். இவர் திரு. வே. நடேசபிள்ளையின் அன்பு மனைவியும் ந. காசிநாதன் (துணுக்காய்), ந. செல்வராஜசிங்கம் (லண்டன்), திருமதி பொ. கமலாதேவி (துணுக்காய்) திருமதி சி. மகேஸ்வரி (துணுக்காய்), திருமதி க. இராஜேஸ்வரி (கொழும்பு), திருமதி சி. சரோஜினிதேவி (லண்டன்), திரு. ந. இரவீந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்வி பொ. சாரதா(லண்டன்), செல்வன் பொ. சுதன் (லண்டன்), திருமதி ந. லலிதா (ஜேர்மன்), பொ. கேசவன் (கிளிநொச்சி), செல்வன் பொ. இராகவன் (சுவிஸ்), செல்வன் க. சதிஸ் (லண்டன்), க. ரமேஸ் (லண்டன்), க. சுரேஸ் (லண்டன்), க. ஞானகலா (யாழ்ப்பாணம்), சி. முரளிசுஜீவா (லண்டன்), க. காண்டீபன் (லண்டன்), சி. பிரசாந் (லண்டன்), சி. வினோத் (லண்டன்), செ. சஞ்ஷாய் (லண்டன்), க. மாலா (கொழும்பு), செ. பிருந்தா (லண்டன்), செ. அஜந்தா (லண்டன்), சி. மிர்ணலினி (துணுக்காய்), சி. சங்கீதா, சி. கோபி, கா. யாழினி, கா, தர்ஷினி, கா. அகிலன், கா. நிலாகினி, க. வாசுகி, க. பகீரதி, க. பார்த்தீபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும்,

பொன்னையா, சிவஞானசுந்தரராஜா (ஜேர்மன்) சிவசேகரம் (லண்டன்), கமலேஸ்வரன் (கொழும்பு), திருமதி நவமணி, திருமதி அம்ரலதா (லண்டன்), திருமதி விஜயலட்சுமி (லண்டன்), ஆகியோரின் மாமியாரும், திருமதி கணபதிப்பிள்ளை தங்கமலரின் பெரியம்மாவும், திருமதி பார்வதிப்பிள்ளை அவர்களின் சகோதரியுமாவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

துணுக்காய்.
(2128)

தகவல்
வே. நடேசபிள்ளை

### சுப்பையா சிவஞானசுந்தரம்

(ஓய்வு பெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்)

தமிழீழ ஆய்வு நிறுவன வடமராட்சிப் பிரிவில் உள்ள வதிரிப் பிரதேச இணைப்பாளர் திரு. சுப்பையா சிவஞானசுந்தரம் (ஓய்வு பெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்) 20-01-92 பி. ப. 3-10 மணியளவில் மார் அடைப்பினால் காலமானார். அன்னாரின் பூதவுடல் இன்று (21-01-92) காலை 10-00 மணிக்கு அவரது இல்லம் 'ஈஸ்வரிவாசா' தம்பியோடையில் இருந்து ஆலங்கட்டை மயானத்திற்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் தெரியப்படுத்துகிறோம்.

(2129)

வடமராட்சி மக்கள்